T03933
R001I07

உ

ஸ்ரீ ராமஜெயம்.



Gl. 26026

3933

# ஸ்ரீஜெகத்குரு சங்கராச்சாரியார்

## தஞ்சையில் விஜயம் செய்த காக்ஷி.

பக்தியுடன் புகழ்ந்த பலருக்கும்
பக்தியில்லாத பாமரர்களுக்கும்

தர்க்கமும்.

நவராத்திரி பூஜாமகிமையும்
ஸ்ரீ குருவின் மகிமையும்

சேர்த்து.

ஆனந்த கப்பலாய்
ஆஞ்சநேயரின் அடியாள்

கே. ஆர். எதிகிரியம்மாளால்
பாடப்பட்டது.

---

28-9-1933

வாலஸ் பிரிண்டிங் ஹவுஸ், தஞ்சாவூர்.



... SERFOJI'S SARASWATI MAHAL LIBRARY, TANJORE
RECEIVED
JUL 1971
3933
R6xw
G3

## ஓடம்.

### பைரவி ராகம்.

தஞ்சை நகர் வந்துதித்தார்—அவரை
தாஸர்களும் பணிந்து நின்றார்
வையகத்தோர் விரும்பினதால்—வியாஸ
பூஜைசெய்ய வந்தாரிங்கே

### முடுக்கு.

சநகரிலுள்ள ஜெனங்களெல்லாம் ஒன்றாய்
வாஞ்சையுடனே சென்று வணங்கியழைத்தார்கள்
னியவான்களெல்லாம் பூர்ண கும்பம் கொடுத்தார்
புஷ்பத்தால் மாலைகட்டிப் புகழுடன்போட்டார்
வகுத்தவீரர்கள் அனைவரும் செல்ல
அவர்நடுவில் அரசகுமாரர்களும் செல்ல
கரமான வாத்யம்முழங்க
வருந்தியே எதிர்கொண்டு வணங்கியழைத்தார்கள்.

வந்தார் வந்தார்—ஜெகத்குருவும்
வேதங்களும் முழங்கிடவே
தந்தார் இடம்—தேவஸ்தானத்தில்
முக்கியமான—முகாஸாவை.

## முடுக்கு.

வா வென்றுபலர் வருந்தியழைத்தார்
போ வென்று சிலர் புலம்பித்திரிந்தார்
சந்யாசம் வாங்கின ஜெகத் குரு என்றார்—சிலர்
காஷாயம்தரித்திட்ட கபடனென்றுரைத்தார்
பக்தியுடன் பலரும் பாதபூஜைசெய்தார்
பகல்கொள்ளை என்றுசிலர் பறையடித்தார்கள்
பிக்ஷை செய்யப்பலர் பரிந்தழைத்திட்டார்
சிக்ஷைகள் செய்து துரத்தென்றார் சிலபேர்
பல்லக்கைத் தூக்கிப் பலர் பக்தியுடன் சென்றார்
பகவானே என்று சிலர் பதட்டமாய் உரைத்தார்
பக்தியுடன் பெண்கள் பார்க்கச் சென்றார்கள்
ஸ்ரத்தை யில்லாதவர்கள் சரியல்லவென்றார்கள்
வீபூதி வாங்கிடவிதவைகள் சென்றார்கள்—இந்த
வீண்தடிகள் வீதியில் வேணதுண்டென்றார்கள்
பலர்கள் ஒன்றாய் சேர்ந்து பிக்ஷயிட்டார்கள்
பஞ்சைகள் என்று சிலர் பரிகாசம் செய்தார்கள்
பூஜையின் சிறப்பை புகழ்ந்து சொன்னார்கள்
ஆசை அதிகமென்று அவமதித்தார்கள்
சாந்தியை உரைக்க வந்தகுருவென்றார்கள்
காந்தியைப் போல இவர் கபடனென்றார்கள்
உபந்யாசத்தில் பலர் ஊக்கங் கொண்டார்கள்
அன்யாய மாய்ச்சிலர் அவமதித்தார்கள்
மோக்ஷமென்று பலர் முன்னே சென்றார்கள்
சாக்ஷியுண்டோவென்று கக்ஷிசொன்னார் சிலர்
ஸர்வக்ஞ பீடமென்றுரைத்தார்கள் பலபேர்
சங்கடமாய் முடியுமென்றுரைத்தார்கள் சிலபேர்
வேதாந்த சித்தர்என்று விண்டார்கள் பலபேர்
வேஷதாரி என்றுரைத்தார்கள் சிலபேர்
காமாக்ஷி அம்பிகையைக்காணச் சென்றார்கள்
படக்காக்ஷியோ இதுவென்று பரிஹஸித்தார்கள்

வீண்வம்புபேசாதே என்றார் பலபேர்
சம்புவே ஜெகத்குரு என்றார்கள் பலபேர்
அரசகுமாரரும் தனதரண்மனைக்கு
அன்புடனே இக்குருவை அழைத்துமே சென்றார்
உத்தானம் சென்றிட ஊர்வலம் வைத்தார்கள்
உதாசீனமாயதைச் சிலர் உரைத்தார்கள்
ஆனைமேல் அரசகுமாரரும் உட்கார்ந்தார்
அவர் நடுவே ஸ்ரீகுருவும் அன்புடன் அமர்ந்தார்
அனைவரும் பின்தொடர அவனி சுற்றினார்கள்
ஆத்திரக்காரர்கள் ஆகாதென்றார்கள்
நால்வேதமும் உணர்ந்த வேதியர்கள்கூடி—நவ
ராத்திரிக்கி இருக்கும்படி மனப்பூர்த்தியாய் வேண்ட
நான் என்று சொல்லாத நற்குருவும் அதற்கு
நாம் இங்கிருந்திட்டால் நஷ்டம் என்று சொல்லி
நல்லவேளை தன்னில் இந்நகரை விட்டுக் கிளம்பி
வளமுள்ள திருவையார் விருப்பமுடன் சென்றார்

வேளைதன்னில் கௌரவமுள்ள
வைஷ்ண குலதிலகமான
வீரமுள்ள டிப்டி கலெக்டர்
ரங்கசாமி அய்யங்காரும்
தீரமுள்ள கலெக்டரான
கிஷ்ணசாமி அய்யருடன்
ஜெகத்குருவின் அடிபணிந்து
தஞ்சைக்கு வந்தருள வேணுமென்றார்
தாக்ஷண்யத்தால் ஸ்ரீ குருவும்
தங்கிடுவேன் என்றுரைத்தார்

முடுக்கு.

வழியிலே எல்லோரும் திரவியம் தந்தார்
தெருவிலே எல்லோரும் ஜெயஜெயவென்றார்

சொன்னவுடன் கலெக்டர் இருவரும் சேர்ந்து
இன்னும் பலகன வான்களும் சேர்ந்து
ராஜன் பில்டிங்கே ரைட்டான இடம் என்று
வாசம் செய்ய நல் வசதி என்றுணர்ந்து
கண்டவர்கள் ப்ரமிக்கும்படி கட்டடமும் கட்டி
கணக்கில்லாமலே காந்தக்கம்பிகளை மாட்டி
வார்ப்புக் கம்பிகளால் வழியில் கேட்கட்டி
வெல் கம் என்று அதில் விளக்குகளை மாட்டி
நவராத்திரி என்றுமே லபிட்டால் எழுதி
வளைவாகப் பல்புகளை மாலே போல்மாட்டி
ஏககாலத்திலே எங்கும் ப்ரகாசிக்க
எலக்டிரிக் கரண்டினல் ஏற்றிவைத்தார்கள்
அழகாய் அமைந்திட்ட கட்டடத்தின் நடுவில்
அம்பிகைக்கு ஆசனமும் அழகுடன் அமைத்து
ஸ்படிகக்கற்களினல் படிகளும்கட்டி
சித்திர வேலைகளைச் சிறப்புடன் செய்து
கர்ஜனை செயும்ராஜ சிங்கத்தைவைத்து
அமைச்சராய் இருபுறமும் யானைகளைவைத்து
பச்சை சிகப்பு பல்பைக் கண்பார்வையில் வைத்து
பார்ப்பவர்கள் பயத்தால் ப்ரமிப்பும் அடைந்தார்
பாக்குக்குலை தெங்குக்குலை வாழைக்குலைகட்டி
பந்தலெல்லாம் சுற்றி பழங்கள் தொங்கவிட்டு
விதவிதமாய் புஷ்பங்களை விந்தையாய்க் கட்டி
சரஞ்சரமாய் சம்பங்கி ஜாதிமலர்கட்டி
தங்கமயமான தேர் அலங்கரித்து
மங்கையாம் திரிபுரையை மத்தியில் ஸ்தாபித்து
கண், காக்ஷிபோல் கட்டியிருக்கும் கல்மண்டபத்தின் நடுவில்
மாக்ஷிமை தங்கும் காமாக்ஷி தன்னை நிறுத்தி
அம்பிகை யிருவரும் அமர்ந்திருந்த கொலுவை
அனைவருங் கண்டுமே ஆநந்தம் கொண்டார்

யாரறிவார்—அவர்மகிமை
அநேகமுண்டு - எடுத்துரைத்தால்

அலக்ஷியமாகவே அவரை உரைத்தால்
அதனாலே அவர்மனத்தில் ஆத்திரம் கொள்ளார்
கபடனென்று நீங்கள் கரகோஷம் செய்தால்
கந்தனின் நாமமென்று சந்தோஷம் கொள்வார்
பணம் பிடுங்கிட இவர் பரதேசியில்லை
பரிந்து நாம் அளித்தாலும் அதிலாசையில்லை
அவர் உண்பது ஒருகவளம் உடுப்பதோ செல்லாக் காவி
உண்மையாய் அவருக்கு ஒன்றிலும் பற்றில்லை
ஆதியில் இவருக்கு அளித்திட்டான் இந்திரன்
ஆனைசேனைகளும் அணிவகுத்த படையும்
குணத்துக்குமெச்சியே குபேரனும் இவருக்கு
கொடுத்திட்டான் சம்பத்துக்குவியலில் பாதி
மைசூர் மஹாராஜா மடம் கட்டிவைத்து
மடாதிபதிப்பட்டம் மகிழ்வுடன் அளித்தார்
ஆயிரம்பேர் இவரை அண்டிப்பிழைப்பார்.
பக்தியுடன் பலர் பணிந்துமே நிற்பார்
கீர்த்திப்ரதாபம் கொண்டமூர்த்தியிவர்தான்
வேத சாஸ்திரம் தெரிந்திட்ட சர்குரு இவர்தான்
இவரிடம் வேதியர்கள்பலர் வித்தைகள் கற்பார்
ஜாதியில் சிறந்தவர்கள் ஸாஸ்திரங் கற்பார்
தைரியமுள்ளவர்கள் தர்க்கங்கள் செய்வார்
தீரமுடனவர்களுக்குத் திருந்திட உரைப்பார்
சாந்தத்தினால் அவர் சந்தோஷம் கொள்வார்
காந்தம்போல் இழுக்கு மந்தக்கந்தனை ஸ்துதிப்பார்
மௌனத்தாலிவர் மகிழ்ச்சியும் கொள்வார்
ஏனனம் என்றெண்ணாமல் எங்கும் நின்றிடுவார்
மோகமெல்லாம் நீக்கி போகமதைத்துறந்து
தாகமில்லாமலே ராஜயோக மதைச்செய்வார்
திரிகால அனுஷ்டானம் தீரமாய்ச் செய்வார்

தீர்மான திவ்ய திருவடியடைவார்
ஆராதனம் செய்ய அணுவும் பிசகார்
அம்பிகையைப் பூஜிக்க ஆநந்தங் கொள்வார்
ஆனந்தமாயவர் அபிஷேகஞ் செய்வார்
அலங்காரங்கள் செய்து அர்ச்சனை புரிவார்
பக்தியுடன் புஷ்பங்களைக் கரந்தனிலே எடுத்து
ஸ்ரத்தையுடன் விடுக்கும்போது சேர்ந்தடுக்காய் நிற்கும்
அம்பாளடி தன்னில்லயிக்கும்மலர்கண்டு
அன்பரும் உள்ளத்தில் ஆனந்தம் கொள்வார்
ஆயிரம் பதினாயிரம் லக்ஷம் வரையில்
ஆனந்தமாயவர் அர்ச்சனையும் செய்வார்
தூய்மையான ஸ்படிக லிங்கம் வைத்து
துரிதமாய் வில்வதளம் கொண்டு பூஜைசெய்வார்
பக்தியுடன் அவர் பூஜைகளும் செய்து
பேரின்பமாம் அந்தப்ப்ருமத்துடன் லயிப்பார்
நவராத்திரி என்று சொல்லும் ஒன்பதுநாளும்
நடத்தினர் பூஜைவெகு ஸ்ரத்தையுடன் சிறப்பாய்
ஒவ்வொருநாளிலும் கன்னிபூஜை செய்ய
ஒன்று முதல் ஒன்பது வயதுள்ள கன்னிகைகள்
வரிசைக்கிரமமாக வயதை வளர்த்தி
வைத்துமே கன்னிகைக்கு பூஜையுஞ் செய்தார்
பட்டுபாவாடையும் பனர்ஸ்புடவையும்
பவுனுடன் புஷ்பம்வைத்து வெற்றிலை பாக்குங் கொடுத்தார்
ஐந்து சுமங்கலிகளுக்கு ஆடையுந்தந்தார்
அன்புடன் அவர்களுக்கு அன்னம் படைத்தார்
சரஸ்வதி பூஜை யன்று சலியாமலவரும்
சென்றவர் எல்லோர்க்கும் சமஸ்தமும் கொடுத்தார்
பெரியகோவில்தன்னில் பிராமணர் சாப்பாடு
அம்பிகை காமாக்ஷியிடம் பெண்கள் சாப்பாடு
ஸ்ரத்தையுடன் அவர் செய்யும் பூஜையை
பக்தியுடன் கண்டால் பரவசமடைவார்
கருணையே வடிவாய் அமைந்திட்டபீடம்
கௌரவமான திவ்ய காமகோடி பீடம்
ஜெகத்துக் கெல்லாம் ப்ரசித்திபெற்றசாரதாபீடம்
ஸாஸ்திரத்தில் முதிர்ந்திட்ட ஸரஸ்வதிபீடம்
ஸ்ரீகுருவும் தானமர்ந்து சிந்தை மகிழ்கொண்டு
சக்தியைப் பூஜைசெய்யும் பக்திகளைக்கண்டால்
சஞ்சலமில்லாமலே நெஞ்சில் நினைத்தால்
முக்தியும் மோக்ஷமும் முக்கியமாய் உண்டு

உலகமுழுதுஞ் சென்று உத்தமனைத் தரிசித்தார்
ஒன்றும் அரியாதபேதை நான் சொன்னேன்
வைஷ்ணவ குலத்தில் வந்துதித்திட்டநானும்
விஷ்ணு அல்லாத அந்த சிவனை ஸ்துதித்தால்
ஆசார்யாளெநானும் அவமதித்ததாய் சொல்வார்
அன்னிய குருவை அடைந்ததாய் உரைப்பார்
அடியாள் செய்திட்ட அற்பக்குற்றத்தை
ஹரிஹரனும் ஒன்றான ஆநந்தன் பொறுப்பார்

ஏலேலோ—ஸ்ரீகுரு விஜயம்
தஞ்சை நகர்—பொங்கும் ஜெயம்

---

## காக்ஷிகண் காக்ஷியே என்ற மெட்டு.

பல்லவி.

கண்டாலானந்தமே கொண்டால்வைபோகமதை (கண்)

அனுபல்லவி.

சித்தம் கலங்காமல் சந்தேகம் கொள்ளாமல்

சரணம்.

ஆனந்தமானதுவாம் அம்பிகையின் தரிசனம்
ஆறுமறியாததுவாம் அவர் அறிவின் மகத்துவத்தை
அறிந்திட்டால் அனைவருக்கும் ஸ்லாக்யம் அதை
தெரிந்து கொண்டா லெல்லோர்க்கும் பாக்யம்
கண்ணுக்கு எட்டாதது மனதினில் மறையாதது
தேடித்தெரிந்திட்டால் திரும்பி போகாதது (கண்)

2. மூவுலகந்தனிலும் முழுதும் நிறைந்ததுவாம்
தவமுனிகளெல்லோரும் தபசினால் அறிந்ததுவாம்
தத்துவம் நிறைந்ததொரு ப்ருமமாம் மனதில்
தெளிவை யுண்டாக்கும் திவ்ய ஜ்ஜோதியாம்
சின்மயாநந்தம் சித்ஸத்ஸ்வரூபம்
எங்கும் ப்ரகாசிக்கும் ஈஸ்வராநந்தமதை (கண்)

3. சஞ்சலமில்லாமலே சற்குருவின் அடிபணிந்து
சதலவித சிச்ருஷை எல்லாம் சற்றும் தயங்காமல்செய்து
அவர் சாற்றும் மொழியில் ஊக்கம் கொண்டு அதை
சந்தேக நிவர்த்திசெய்து கொண்டு
சற்குண ப்ரும்மத்தை சற்றும் அழியாததை
சஞ்சலமில்லாததை சிந்தைதனில் கொண்டாலதை (கண்)

4. அய்யன் திருநாமத்தை அழியாமல் மனதில்கொண்டு
அற்ப சுகங்களெல்லாம் அறவே ஒழித்துவிட்டு
ஆத்மாவின் நிலையதனை தெரிந்து அதற்கு
அன்பினால் அலங்காரம் செய்து
மனதினால் துதித்து மர்மமாய் அர்ச்சித்து
மௌனத்தால் மகிழ்வித்து மனதை விஸ்தாரமாக்கி (கண்)

5, ஆதிசதாசிவமே அவதாரமாகி வந்தார்
சங்கரன் அருளாலே ஜெகத்குருவாய் அவதரித்தார்
அம்பாளின் அபிஷேகமென்ன சொல்வேன்,
அர்ச்சனையின் அர்ப்புத மென்ன சொல்வேன்
பந்தலலங்காரம் பார்க்கச் சிங்காரம்
பக்தியின் விசேஷம் பார்க்கப்ப்ரும்மானந்தம் (கண்)

6. பாக்குக்குலை வாழக்குலை தேங்காய்குலைகள் தொங்க
வைரமணி நீலமணி விசித்ர முடன் தொங்கவிட்டு
விதவிதமான லஸ்தர் குளோப்பர் கட்டி அதில்
விசித்திரமாய் சித்ரவேலை செய்து
பலவித காய்களைப் பகட்டாய்த் தொங்கவிட்டு
பார்ப்போர் மனங்களிக்க பகிரங்கமாய்ப்பூஜைதன்னை

7. வாழைகமுகுகளால் வழியெல்லாம்அலங்கரித்துத்
தங்கமயமான மண்டபம் அலங்கரித்து
மாணிக்கக் கற்களால் மேடை கட்டி அதில்
மங்கை திரிபுரையை நாட்டி
கையில் மலரெடுத்து அம்பிகை பாதத்தில் தொடுத்து
பக்தியுடனவர் ப்ரும்மத்துடன் லயிப்பதை

8. மல்லிகைமுல்லை மலர்களெல்லாம் மலரடியில் தான்பா
ஜாதியிருவாக்ஷியெல்லாம் சரஞ்சரமாய் தொங்கவிட்டு
செந்தாழை மடலால் பாய்விரித்து
சீராய் சிவலிங்கத்தை ஸ்தாபித்து
வாசனைகள் வீச வேதமந்திரங்க ளோத
வில்வதளங்கொண்டு அவர் விரும்பிச்செய்யும்அர்ச்ச

9. பக்தியுடனிவரைப் பலதரமும் பணிந்திட்டாலும்
பாத பிக்ஷைகள் எல்லாம் பாங்காய்ச் செய்திட்டாலு
பார்க்கப் பார்க்க சலிக்காது கண்பார்வையும்
மாயையில் மறையாது இந்த மனமும்
திவ்ய ஸ்வரூபம் தேவரின் அவதாரம்
தேடிக் கிடைக்காத தேவாம்ருதமாம் இதை (கண்)

முற்றிற்று.